[1990 சனவரி 20

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இசைவுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது. உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால் நன்றாக இருக்கும்.

திரு. இரா. மோகன் : இது மிக முக்கியமான செய்தி. வேர்க்கடலையை அவர்களே, கொள்முதல் செய்யாமல், வேர்க் கடலையைக் கொள்முதல் செய்வதற்கு, தனியாக ஒரு அதிகாரி யைப், போட்டு கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு பரிசீலிக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலே, கடந்த காலத்திலே நடைபெற்ற ஊழல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். 1984 ஆம் ஆண்டு முதற்கொண்டு அந்த ஊழல் தொடர்ந்து நடை பெற்று வந்ததை, 1989 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட 7 ஊழியர்கள் கைது செய்யப்பட்டு இந்த அரசாலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுப் பதி வாளரும் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. வேர்க்கடலை கொள்முதல் செய்வதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

பெருமாள் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்

*2094. திரு. ந. கணேசமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ் சிப்பாடி தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரியான பெருமாள் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1990 சனவரி 20]

திரு. ந. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்தப் பெருமாள் ஏரி என்னுடைய தொகுதியிலே சுமார் 7 ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்கு உகந்த ஏரி. இது கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக 3 போக சாகுபடிக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் தற்போது 3 போக சாகுபடிக்கு ஏற்றதாக இல்லை. நெய்வேலியிலிருந்தும், வீராணம் ஏரியிலிருந்தும் வருகின்ற நீர், இந்தப் பெருமாள் ஏரியை வந்தடைந்து, பின்னர் அதைவிட்டு கடலுக்குச் சென்று கலக்கிறது. ஆகவே, அந்த ஏரியை ஆழப்படுத்த, மறுபடியும் பரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அந்த ஏரி பாசனத்துக்கு மிக முக்கியமான ஏரி என்கிற காரணத்தால்தான் அந்த ஏரியினுடைய முழு நீர் மட்டத்தை ஒரு அடி உயர்த்துவதற்கா அரசு 1974-75 ஆம் ஆண்டு சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் அதற்குப் பல நுட்பமான பணிகளைச் செய்து இன்றைக்கு நீர் மட்டம் உயர்ந்து இருக்கிறது. ஏற்கனவே 477.15 மில்லியன் கன அடி கொள்ளளவில் இருந்த ஏரி இன்றைக்கு சிறு (குறுக்கீடு) சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட காரணத்தால் 574 மில்லியன் கன அடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) சிறப்பு சிறு பாசனம் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்ற மற்றொரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் வைத்து இருக்கிறார். ஆழப்படுத்துவதற்கு அதிகமாகச் செலவாகும். செலவை செய்வதற்குக் கூட அரசு முயற்சிக்கலாம். ஆனால் அப்படி ஆழப்படுத்துகிறபோது கிடைக்கின்ற மண்ணை கொட்டுவதற்கு ஒரு இடம் அங்கே கிடைக்கவில்லை. எனவே அதற்கு அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. வழிவகை கண்டபின் அந்தக் காரியத்தையும் அரசு செய்யும்.

திரு. அ. லே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருமாள் ஏரி அல்லாது, பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பல ஏரிகள், பல ஆண்டுக்காலமாக பராமரிக்கப்படாமல் தூர்ந்துபோய் இருப்பதால் பல லட்சம் ஏக்கா நஞ்சை நிலங்கள் பயிரிடப்படாமல் இருக்கின்றன. ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்திலுள்ள ஏரிகளை ஆழப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருமாள் ஏரிக்கு 6,503 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் இருக்கின்றன. அது ஒரு பாசன ஏரியும் கூட. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும்.

சட்டமன்ற ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 சனவரி 20

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயுள்ள ஏரி குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தனியாக ஒரு சட்டம் கொண்டுவர அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? தமிழ் நாட்டிலுள்ள ஏரி குளங்களை மராமத்து செய்வதற்கு, வெளி நாட்டு நிதி நிறுவனங்கள் ஏதாவது உதவி செய்ய முன் வந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற ஏரிகளை ஆழப்படுத்த, அதனுடைய கரைகளை உயர்த்த, அதற்கு வேண் டிய கால்வாய்களை நவீன முறையில் அமைக்க, ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின்கீழ் உதவி பெற்று இரண்டு கட்டமாக அதற்குவேண்டிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து, அவ்வப்போது அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதோடு பொது மக்களுடைய ஒத்துழைப்பும் அதற்குத் தேவைப்படுகிறது. சட் டத்தின் மூலமாகவே எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்று கருதக் கூடாது. மனமாற்றமும் தேவை.

10-05 மணி

ஈரோடு நகரத்தில் இரயில்வே நுழை பாலத்தை அகலப்படுத்துதல்.

*5294. திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்தில் பூந்துறை ரோட்டில் அமைந்துள்ள இரயில்வே நுழை பாலத்தை ஆழப் படுத்தி அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது இந்தத் திட்டத்தினை மேற்கொள்ள முன்வரும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அது முடிந்த பிறகு அந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து பல முக்கிய நகரங்களுக்குச் செல்கிற பாதையில் அந்தப் பாலம் இருக்கிறது. அதேபோல